சுருக்கம்

பணியமைப்பு - நீர்வளத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி- கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி பூ.நிர்மலா, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு கே.பி.பூபதி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நீர்வளத் (பி1) துறை

அரசாணை (3ப) எண். 69

நாள்: 25.10.2022
சுபகிருது, ஐப்பசி 8
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திட்ட உருவாக்கம், சென்னை அவர்களின் கடிதம் எண். எஸ்1(2)/1065/2020, நாள் 06.08.2020, 24.09.2020 மற்றும் 05.02.2021

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் செயல்படும் உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, மின் உபகோட்டம், சேலம் அலுவலகத்தில் மின்கம்பியாளர் தரம்-2 ஆகப் பணியாற்றி வந்த திரு கே.பி.பூபதி கடந்த 17.09.2012 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகளான திருமதி பூ.நிர்மலா என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டம் மற்றும் திட்ட வடிவமைப்பு கோட்டம், ஈரோடு அலுவலகத்தில் 27.12.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருவதாகத் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள்/ சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு நீர்வளத்துறை திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நீர்வளத்துறை, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரின் கருத்துருவினை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு கவர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்படுவதற்கு முன்னரே திருமதி பூ.நிர்மலா, (த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் கே.பி.பூபதி) என்பவருக்கு திருமணமாகியுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யவும் மற்றும் பணியில் சேர்ந்த நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பயன்களை வழங்கவும் ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இன் பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றை இச்சட்டத்தின் பிரிவு 58-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனியர் பொருட்டு ஆளுநர் அவர்கள் தளர்வு செய்கிறார்.

3. அதனடிப்படையில் திருமதி பூ.நிர்மலா அவர்களின் பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத்துறையில், கருணை அடிப்படையில்,

உண்மை நகல் – கையொப்பமிடப்பட்டது
செயற்பொறியாளர், நீ.வ.து.,
திட்டங்கள் திட்டமிடுதல் (ம) வடிவமைப்பு கோட்டம்,
ஈரோடு - 11.

இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 27.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.16686/ட்டி.1/2022, நாள் 30.09.2022இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திட்ட உருவாக்கம், சேப்பாக்கம், சென்னை-5.
திருமதி பூ.நிர்மலா, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திட்ட உருவாக்கம், சென்னை-5 வழியாக)

நகல்:

மாநில கணக்காயர், சென்னை -18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை- 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

உண்மைநகல் - கையொப்பமிடப்பட்டது.

செயற்பொறியாளர், நீ.வ.து.,
திட்டங்கள் திட்டமிடுதல் (ம) வடிவமைப்பு கோட்டம்,
ஈரோடு - 11.